1975 எப்ரல் 11] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

5. திரு. எல். பலராமன்.

6. திரு. பி. ஆர். தாமஸ்.

7. திரு. ஏ. ஆர். தாமோதரன்.

8. திரு. ஜார்ஜ் கோமகன்.

9. திரு. சி. ரஸ்ஸல் ராஜ்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன். மேலவை விதி 156 (1)-ன் படி மாண்புமிகு மேலவை முன்னவர், அவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர், இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற மேலவை விதிகளின் 156 (4) விதியின் கீழ் திரு. கே. ராஜாராம் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி நான் நியமித்துள்ளேன்:

(4) அவைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 1975–76 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆறு உறுப்பினர் பதவிகளுக்குக் கீழ்க் கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1. திரு. எஸ். இராமகிருஷ்ண தேவர்.

2. திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி.

3. திரு. கே. எஸ். கணபதி.

4. திரு. எம். கே. டி. நடராசன்.

5. செல்வி தமிழரசி.

6. திரு. எச். எல். முருகேசன்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது, ஆறு நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஆறு உறுப்பினர்களும், அவைக்குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மேலவை விதி 173 (1)-ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்.

1. திரு. எம். எம். பக்கர்.

2. திரு. ஆர். சக்திமோகன்.

மேலவைத் துணைத் தலைவர் அலுவல் முறையில் குழுவின் தலைவரா வார்.

4. கவன ஈர்ப்பு.

(1) திருச்சி அரசு தலைமை மருத்துவ மனையில் ஆபரேஷன் தியேட்டர் மூடப்பட்டது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "திருச்சி அரசாங்க தலைமை மருத்துவ மனையில் நேற்றைய தினம் டிடானஸ் தொற்று நோய் காரணமாக, ஆபரேஷன் செய்யும் போது ஒரு நோயாளி இறந்து அதனால் ஆபரேஷன் தியேட்டரும் மூடப் பட்டது. இதே காரணமாக ஆபரேஷன் தியேட்டர் கடந்த ஆறு மாதத்தில் மூன்று முறை மூடப்பட்டது குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திருச்சி யிலே உள்ள இந்த மருத்துவமனையில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னாலே டிடானஸ் தொத்து நோய் திடீரென்று ஏற்பட்டதன் விளை வாக அங்கேயுள்ள அந்த மருத்துவமனையினுடைய அறுவையரங்கு ஆறு வார காலத்திற்கு மூடி வைக்கப்பட்டது. ஆனால் அப்படி மூடி வைக்கப் பட்ட காலத்திலே ஒரு நெருக்கடி அறுவையரங்கு அந்த இடைக்காலத்தில் செயல்பட்டு வந்தது. அதற்குப் பிறகு அரசு ஆராய்ச்சி நிலையத்தில் அறிக்கை கிடைக்கப் பெற்ற பிறகு மூடி வைக்கப்பட்டிருந்த அறுவை யரங்கு 2—12—1974 முதல் செயல்படத் தொடங்கியது. மறுபடியும் 3–12–1974-ம் நாள் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட ஒரு நபர் 10–12–1974-ல் மருத்துவ மனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு அறுவை சிகிச்சை பின் விளைவாக டெட்டனஸ் பாதிப்பு ஏற்பட்டதால் அந்நோயாளி மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப் பட்டார். அறுவை அரங்கு 11—12—1974-ல் மறுபடியும் மூடப்பட்டு அங்கு உபயோகத்தில் இருந்த பொருள்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டன. இதற்கிடையில் நெருக்கடி கால அறுவை அரங்கு ஒன்று மறுபடியும் அந்த இடைக் காலத்தில் செயல்பட்டு வந்தது.

குடும்பக் கட்டுப்பாடு ஆண் அறுவை சிகிச்சைகள் செய்வதற்காக ஒரு தனி அறுவை அரங்கு ஏற்படுத்தப்பட்டது. வயிறு வழி கருத்தடை அறுவை சிகிச்சைகள் திருவரங்க அரசு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே செய்யப்பட்டன. போக்குவரத்து விபத்துகள் மற்றும்